**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | Crlmp.No. 2395/2024 |
| Prosecution Witness | : | **ம.சா.**1 |
| Name | : | **துரைராஜ்** |
| Father's / Husband Name | : | **எல்லமுத்து** |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 51/2025 |

**தேதி : 12.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 13.05.2018அன்று எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடப்பதற்காக பூ கூடை எடுத்துக்கொண்டு நானும், எங்கள் ஊர் கிராம மக்களும் பொதுபாதையில் சென்றுக்கொண்டிருந்தோம். வெங்கடாசலம் மகன்களான வெள்ளைசாமி, பாஸ்கர், குமார், கலைசெல்வன் மற்றும் அவர்கள் குடும்பத்தை சேர்ந்த நீலவேணி, சசிகலா, மலர் ஆகியோர்கள் சேர்ந்து பொதுபாதையில் சென்றுக்கொண்டிருந்த எங்களை வழிமறித்து அந்த பாதை வெங்கடாசலம் பாதையா அல்லது குண்டுமணி வீட்டு பாதையா என்று சொல்லிவிட்டு இங்கிருந்து போங்கல் என்று சொல்லி தகராறு செய்தார்கள். நான் அதற்கு இந்த பாதை பொதுபாதை என்றும், திருவிழா முடிந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன்.

அதற்கு வெள்ளைசாமி நீ சொல்லிவிட்டு போய்டுவா, தேவடியா மகனே, புண்டைமகனே என்று சொல்லி அசிங்கமாக திட்டினார். மேலும் கையில் வைத்திருந்த உருட்டுகட்டையால் என்னுடைய வலது தோள்பட்டையில்

இதோடு ஒழிந்துபோடா என்று சொல்லி அடித்தார். பாஸ்கர் என்பவர் உருட்டுகட்டையால் என்னுடைய தொடையில் அடித்தார். குமாரும், பாஸ்கரும் முதுகு பகுதியில் அடித்து என்னுடைய சட்டையை கிழித்து கீழே தள்ளி என்னுடைய சட்டை பையில் இருந்த கோவில் பணம் ரூ.600/–ஐ எடுத்துக்கொண்டார்கள். மேலும் நீலவேணி, சசிகலா, மலர், கனிமொழி ஆகியோர்கள் என்னை பார்த்து தேவடியா பைல அடித்து கொள்ளுங்கடா என்று சொல்லி காப்பு கட்ட வைத்திருந்த குச்சியால் அடித்தார்கள். நான் வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டேன். அருகில் இருந்தவர்கள் தடுத்தார்கள். நான் அம்மாபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு 1.30 மணிக்கு சிகிச்சை பெற்றுக்கொண்டேன். ஊர் பெரியோர்கள் திருவிழா நடக்கிறது என்றும், தற்போது புகார் கொடுக்கவேண்டாம் என்றும், பேசி தீர்த்துகொள்ளலாம் என்று என்னிடம் கேட்டுக்கொண்டதால் நான் புகார் கொடுக்கவில்லை.

திருவிழா முடிந்த பிறகு 24.05.2018 அன்று ஊர் பொதுமக்களுடன் சென்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.